தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-12-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பூச்சி அருங்காட்சியகத்தின் சிறப்பு அஞ்சல் உறை வெளியீட்டு விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் அஞ்சல் துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு அளவிலான அஞ்சல்துறை கலை நிகழ்ச்சி விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள இந்தியாவின் முதல் பூச்சி அருங்காட்சியகத்தின் சிறப்பு அஞ்சல் உறை வெளியீட்டு விழாவும் நேற்று (4-12-2018) நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தின் துணைவேந்தர் முனைவர். நீ. குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார். இவ்விழாவில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழக பயிர் பாதுகாப்பு இயக்குநர் முனைவர். அ.சு. கிருக்ஷ்ணமுர்த்தி அஞ்சல் துறை தலைவர் மேற்க மண்டலம் கோவை திரு. அம்பேக்ஷ் உப்மன்யூ, முதல்நிலை அஞ்சல் கண்காணிப்பாளர் கோவை கோட்டம், முனைவர் சுதீர் கோபால் ஜாக்ரீ மற்றும் அஞ்சல்துறை இயக்குநர், மேற்கு மண்டலம், கோவை திரு. வி. இராமசாமி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளும் கலந்துக் கொண்டனர்.

இவ்வஞ்சல் உறையை அஞ்சல்துறை தலைவர் மேற்கு மண்டலம் கோவை திரு. அம்பேக்ஷ் உப்மன்யூ, வெளியிட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அதனைப் பெற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழக துணைவேந்தர் அவர்கள் பேசுகையில் இவ்வருங்காட்சியகம் பொதுமக்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருப்பதாகவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்விழா தமிழ்நாடு அஞ்சல்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழக பயிர் பாதுகாப்பு இயக்குநர் முனைவர்.அ.சு.கிருக்ஷ்ணமுர்த்தி, பூச்சியில் துறை தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர். நா. முத்துகிருக்ஷ்ணன், பூச்சி அருங்காட்சியக பொறுப்பாளர் முனைவர். நா.சித்ரா ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

மக்கள் தொடர்பு அலுவலர்